# மதுரைக் காஞ்சியில் நிலையாமை

*முனைவர் க. அழகர்*
முதல்வர், மகாத்மா காந்தி கலை மற்றும் அறிவியல்
பெண்கள் கல்லூரி, சோலைசேரி

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5022

### முன்னுரை

பத்துப்பாட்டு நூல்களிலேயே அளவில் மிகப்பெரிய பாடல் மதுரைக் காஞ்சியாகும். இந்நூல் 782 அடிகளை உடையது. இதனை இயற்றியவர் மாங்குடி மருதனார் ஆவார். இந்நூல் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் மீது பாடப்பட்டது. நெடுஞ்செழியனுக்கு உலக இன்பம், பொருட்செல்வம், இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை போன்றவை நிலையற்றவை என்ற காஞ்சித் திணையை விரித்துக் கூறுவதால் இந்நூல் இப்பெயர் பெற்றது. இதன் மூலம் மன்னனுக்கு, மாங்குடி மருதனார் "மறச்செயல்களை விடுத்து அறச் செயல்களைப் புரிக" என அறிவுறுத்துவதைக் காணலாம். மேலும் வரலாற்றுச் செய்திகளையும், பண்பாட்டுச் செய்திகளையும் அதிக அளவில் கூறும் ஒரே நூல் இந்நூலாகும். அந்த வகையில் மதுரைக் காஞ்சி காட்டும் நிலையாமை குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

### நிலையாமை - பொருள் விளக்கம்

நிலைத்து நிற்காத தன்மையே நிலையாமையாகும். நிலையாமை ஒன்றே நிலையான உண்மை என்கிறார் புத்தர்.

**"பாங்கரும் சிறப்பின் பல்லாற்றானும்**
**நில்லா உகலம் புல்லிய நெறித்தே"**

- என்கிறார் தொல்காப்பியர்.

காஞ்சி என்பதற்கு நிலையாமை என்றே பொருள் கொள்கிறார் மாங்குடி மருதனார்.

உலகப் பொருட்கள் நிலையற்றவை என்பதை அறிதல் வேண்டும். அதாவது அழியும் பொருள்களை நிலைத்திருப்பவை என்று நினைத்தல் இழிவாகும் என்கிறார் திருவள்ளுவர்.

**"நில்லாதவற்றை நிலையின் என்றுணரு:ம்**
**புல்லறிவாண்மை கடை"**

**(குறள் - 340)**

முடிசூடும் மன்னரும் அவர் அடி தழீஇ வாழ்வாரும் இறுதியில் வேறுபாடின்றி இறந்து பிடி சாம்பலாய்ப் போவது உறுதி என்பதைப் பட்டினத்தார் பின்வருமாறு கூறுவதைக் காணலாம்.

**"முடி சார்ந்த மன்னரும் மற்று முள்ளோரும் முடிவிலொரு**
**பிடி சாம்பராய வெந்து மண்ணாவதுங் கண்டு பின்னும்**
**இந்தப் பிடி சார்ந்த வாழ்வை நினைப்பதெல்லாம் பொன்னின்**
**அம்பலர் அடிசார்ந்து நாம் உய்ய வேண்டுமென்றே அறிவாரில்லையே"**
**- (திருத்தில்லை - பா - 7)**

### இளமை நிலையாமை

இளவயதும் அந்த வயதுக்குரிய தன்மையும் இளமையாகும். இளமையானது நீர்க்குமிழ் போல் கழிவது. இளமையானது ஆற்றுநீர் ஓடுதல் போல மிக வேகமாக ஓடி மறைதலும், குளத்து நீரு போல ஒருகாலைக் கொருகால் குறைந்து படுதலும் உண்டு. இளமைக்காலம் நிலையென்று எண்ணி உல்லாசமாக இருப்பவர்கள் ஒருநாள் இளமையும் இழந்து முதுமை அடைந்து கோலூன்றி நடப்பார்கள். மேலும் தலை நரைத்துப்போகும் முதுமை வந்து விடும் என்பதை உணர்ந்த அறிவார்ந்த பெரியோர்கள் இளமையிலே துறவு வாழ்வை மேற்கொண்டனர் என்கிறது நாலடியார்

**"நரைவரும் என்றெண்ணி நல்லறிவாளர்**
**குழவியிடத்தே துறந்தார் - புரை தீரா**
**மன்னா இளமை மகிழ்ந்தாரே கோல் ஊன்றி**
**இன்னாங் கெழுந்திருப்பார்"**
**- (நாலடியார் - பா - 11)**

அலைகள் உயரமாகத் தோன்றும், சிறிது நேர்த்தில் அழிந்துவிடும் அது போன்றது தான் வாழ்க்கை என்கிறார் மாங்குடி மருதனார்.

**"ஓங்கு திரை வியன் பரப்பின்**
**ஒலிமுந்நீர் வரம்பு ஆக"**
**- (மதுரைக்காஞ்சி - 1 - 2)**

இளமையும், காமமும் நின்பாணி நில்லா என்கிறது கலித்தொகை. வேற்றி பொருந்திய ஆற்றலுடைய மன்னர்கள் பலர், கடற்கரையில் ஒசையுடன் பொருந்திய அலையால் எற்பட்ட எண்ணிக்கையைக் காட்டிலும் இவ்வுலகை ஆண்டு மடிந்தனர். ஆதலால் இளமை நிலையில்லாதது என்கிறார் மாங்குடி மருதனார்.

**"பணை கெழு பெருந்திறல் பல்வேல் மன்னர்,**
**கரை பொருது இரங்கும் கனைஇரு முந்நீர்**
**திரையிடு மணலினும் பலரே உரைசெல**
**மலர்தலை யுலகம் ஆண்டு கழிந்தோரே"**
**- (மதுரைக் காஞ்சி - பா - 234-237)**

### செல்வம் நிலையாமை

செல்வம் என்பது ஒருவருக்குரிய மதிப்புள்ள உடைமைகளின் தொகுப்பு, அல்லது சொத்து செல்வமாகும். அவரிடம் உள்ள செல்வம் நிரந்தரம் இல்லை. நிலையற்ற செல்வம் சீமானை ஏழையாக்கும். செல்வனை வறியவன் ஆக்கும். வண்டிச் சக்கரம் போல் சுழல்வது செல்வமாகும். செல்வமும், வாழ்க்கையும் இருளில் தோன்றி மறையும் மின்னலைப் போல, அவர்களின் செல்வமும், வாழ்க்கையும் இருப்பது போல இருந்து மறைந்துவிடும் என்கிறது நாலடியார்

**"புல்லறிவாளர் பெருஞ்செல்வம் எல்லில் கருங்கொண்டு வாய்திறந்த மின்னுப் போல் தோன்றி**
**மருங்கறக் கெட்டு விடும்"**
**- (நாலடியார் - பா - 8)**

கிட்டிய பொருளும் நிலையாக இருப்பது இல்லை. போரினாலும், பரத்தை வழிச் சேரலாலும் செல்வம் அழிவதை மாங்குடி மருதனார் குறிப்பிடுவதைக் காணலாம்.

பகைவரின் செல்வங்கள் பாண்டியன் நெடுஞ்செழியன் எடுத்த படையெடுப்பால் அழிந்தன. பாண்டிய நெடுஞ்செழியன் பகைவர் நிலத்தில் புகுந்து காவல் சோலைகளை அழித்தான். மருத நிலங்களை நெருப்பூட்டி எறித்தான். நாடென்ற நகரை அழித்துக் காடாக்கினாய். பசுக்கூட்டம் தங்கிய இடமெல்லாம் போருக்குப் பிறகு தங்கும் இடமாயிற்று. ஊராய் இருந்த இடங்களை

பாண்டிய நெடுஞ்செழியன் அழித்தான். இக்கருத்தினை மாங்குடி மருதனார் கூறுவதைக் காணலாம்.

**"உறுசெறுநர் புலம்புக்கு அவர்**
**குடிகாவின் நிலை தொலைச்சி**
**இழிபு அறியாப் பெருந்தண்பனை**
**குரூஉக் கொடிய எரிமேய**
**நாடெணும் பேர் காடாக**
**ஆசேந்த வழி மாசேப்ப**
**ஊரிருந்த வழி பாழாக"**

**- (மதுரைக்காஞ்சி - பா - 154 - 158)**

போரினால் பகைவர் ஊர்கள் எல்லாம் "பாழாகிப் போனது. அவ்வூரிலுள்ள குடிகள் எல்லாம் தேம்பி அழுதனர். பின்பு புற ஊரில் செழிப்பாக இருக்கும் தனது சுற்றத்தாரை நாடிச் சென்றனர் என்கிறார் மாங்குடி மருதனார்

**"கொழும்பதிய குடி தேம்பிச்**
**செழுங் கேளிர் நிழல் சேர"**

**(மதுரைக்காஞ்சி - பா - 167 - 168)**

பாண்டிய நெடுஞ்செழியனைப் பணிந்த பகைவர் அம்மன்னனின் நிழலில் வாழ்ந்தனர். தன்னைப் பணியாத பகை மன்னர்களை பாண்டியன் நெடுஞ்செழியன் அவர்களோடு போரிட்டு வென்று அவர்களை அடிபணியச் செய்து, அவர் கொடுக்கும் செல்வத்தைத் திரையாகப் பெற்றான் என்கிறார் மாங்குடி மருதனார்.

**"பணிந்தோர் தேஎம் தம்வழி நடப்ப**
**பணியார் தேஎம் பணித்துத் திரை கொண்மார்"**

**- (மதுரைக்காஞ்சி - பா - 229 - 230)**

### யாக்கை நிலையாமை

உடல் மறைந்து போதல் யாக்கை நிலையாமை ஆகும். மரணத்தை வென்று எவரும் இவ்வுலகில் மிஞ்சி இருந்தது இல்லை. எல்லோரும் ஒருநாள் இறக்க நேரிடும். பனிக் காலங்களில் புல்நுனி மேல் முத்து முத்தாக பனி நீர் தங்கியிருக்கும். அப்பனி நீர் வெய்யில் வரவர ஆவியாகி மறைந்து போகும். அது போல இவ்வுடம்பும் ஒருநாள் அழிந்து போகும். எனவே இவ்வுடம்பு இருக்கும் போதே நல்லறம் செய்க என்கிறது நாலடியார்.

**"புல்நுனிமேல் நீர் போல நிலையாமை என்றெண்ணி**
**இன்னினியே செய்க அறவினை"**

**- (நாலடியார் - பா - 29)**

மதுரைக்காஞ்சியில் மாங்குடி மருதனார் யாக்கை நிலையாமை பற்றிப் பின்வருமாறு கூறுவதைக் காணலாம்.

வாழ்நாள் முதலியன எல்லாமே நிலையற்ற தன்மையில் உள்ளது. அந்த வாழ்நாளை ஒவ்வொருவரும் பயன் உடையதாகச் செய்ய வேண்டும் என்றால் அறச் செயல்களைச் செய்து புகழைப் பெறவேண்டும்.

**"கொன்று ஒன்று கிளக்குவல் அடுபேன் அண்ணல்**
**கேட்சின் வாழி! கெடுக நின் அவலம்**
**கெடாது நிலை இயர் நின்சேண் விளங்கு நல்லிசை"**

**- (மதுரைக்காஞ்சி - பா - 207 - 209)**

### முடிவுரை

உலகமும் உலகத்துத் தோன்றும் யாவும் என்றும் நிலையில்லாதன ஆகும். நிலை பேறுயுடையது சிறந்த புகழ் ஒன்றே. அந்தப் புகழை அடைய வேண்டுமெனில் மக்கள் நல்ல அறச்செயல்களைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் நிலையில்லாத உடம்பை விட்டு நிலையாக இருக்கக் கூடிய வீடுபேற்றை நாம் அடையலாம் என்பதை இக்கட்டுரை வாயிலாக நாம் அறியக்கூடிய செய்தியாகும்.